[20th January 1961

Last Grade Government Servants' Association, Erode

MR. SPEAKER : As the hon. Member who gave notice of Question No. 4 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 4 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஈரோட்டிலுள்ள சர்க்கார் கடைநிலை ஊழியர் சங்கக் கட்டிடம் கட்ட நிலம் கோரி சர்க்காரிடம் விண்ணப்பித்தனரா?

(இ) அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) The Secretary, Last Grade Government Servants' Association, Erode, applied in September 1959 to the Collector of Coimbatore for the grant of 10 cents of land in the Taluk Office compound for constructing an office building.

(இ) The site is not available for grant in favour of the association, as it is required in connection with the developmental programmes. The new Panchayat Union Council Building is being constructed on this site.

Indoor games

* 5 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a stadium for indoor games in the Madras City; and

(*b*) if so, where and when?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Is it not a fact that the foundation for a stadium for indoor games in the City was laid in 1958 by the Corporation of Madras and if so, what has happened to that foundation? May I know whether there is a proposal to construct the stadium there?

THE HON. SRI C. SUBRAMANIAM : I suppose that it will share the fate of many foundations laid in this country.

Bridge across Pamaniar

* 6 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the construction of the bridge across Pamaniar on Muthupet-Himisal Road in Thanjavur is progressing according to schedule, if not, the reasons therefor;

(*b*) the estimated cost of the bridge; and

(*c*) when it is likely to be completed?

20th January 1961]

THE HON. SRI P. KAKKAN : (*a*) The Member presumably refers to the bridge across the Paminiar at mile 40/6 of the Thanjavur-Pattukottai-Muthupet road under construction. The work could not progress according to schedule as there was difficulty in sinking well foundations and completing them.

(*b*) Rs. 4,55,000.

(*c*) March 1962.

SRI R. SRINIVASA IYER : அரை அங்குல, அரையேரைக்கால் அங்குல இரும்புக் கம்பிகள் முப்பது டன் வரையில் அகப்படவில்லை என்ற காரணத்தால் இப்பொழுது ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு மேலாக இந்தப் பாலம் கட்டுவது தாமதப்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானால், இரும்புக் கம்பிகள் உடனடியாக ஸப்ளை செய்யப்படுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : என்னிடத்தில் இருக்கும் தகவலிலிருந்து நான் சொல்வேன், இரும்பக் கம்பிகள் இல்லாத காரணத்தால் அல்ல அந்த வேலை தாமதப்படுவது. வருஷத்தில் மூன்று மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் அந்த ஆற்றில் தண்ணீர் ஓடுவதால், அஸ்திவாரம் போடும் வேலையில் கஷ்டம் ஏற்பட்டிருந்தது. அதனால்தான் வேலை தாமதப்பட்டிருந்தது.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அது பற்றி மந்திரி அவர்களுக்கு எழுதியிருக்கலாம்.

SRI A. VEDARATHNAM : அந்தப் பாலம் எவ்வளவு காலத்தில் கட்டி முடிக்கப்படவேண்டுமென்று காண்டிராக்ட் விடப்பட்டது? எத்தனை முறை அந்தக் காண்டிராக்டருக்குக் காலம் ஒத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது? ஐந்து வருஷ காலமாக இந்தப் பாலம் அமைக்கும் வேலை முடியாமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் இப்பொழுது கூறியது போதுமான காரணமாகுமா?

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கம் இந்த வேலைக்கு ' சாங்ஷன் ' கொடுத்தது 1956-ம் ஆண்டிலே. வேலைகளை எவ்வளவு துரிதமாகச் செய்யவேண்டுமோ அவ்வளவு துரிதமாகத்தான் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது. இருந்தாலும், நான் முன்பு சொன்னபடி, ஒவ்வொரு வருஷத்திலும் மூன்று மாதங்கள்தான் அங்கே வேலை செய்ய முடிகிறது. அதன் காரணத்தால்தான் வேலையில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஜூலை 1960-க்குள் வேலை முடிய வேண்டுமென்று திட்டமிட்டோம். ஆனால் இருக்கும் கஷ்டத்தை முன்னிட்டு மார்ச் 1962-க்குள் முடித்து விடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

SRI R. SRINIVASA IYER : இந்தப் பாலம் மிகவும் முக்கியமானதாக இருப்பதாலும், தற்போது ஜனங்கள் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதாலும், உடைந்து போயிருக்கிற பாலம் ஆபத்தான நிலையில் இருப்பதாலும், மரப் பாலமாவது ஒன்று உடனடியாக அமைத்துக்கொடுக்க சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது கட்டப்படும் பாலத்தைத் துரிதமாகக் கட்டி முடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.